1984 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, எவ்வளவு தொகை வேண்டுமென்று அவ்வப்போது திட்டம் வகுத்து மத்திய அரசுக்கு அனுப்புகிறோம். அவர்களும் கொடுத்து வருகிறார்கள். வறட்சி நிவாரணப் பணிகள் என்பதன் கீழும் தருகிறார்கள். தருவது போதாது, நாங்கள் கிராமங்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறோம் என்று கேட்கிறோம், அவர்கள் தருகிறார்கள். மறுபடியும் எழுதுகிறோம், தருகிறார்கள். இப்படி புராசஸ் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கும் திட்டம் 3 கட்டங்களில் முடிந்தபிறகும் கூட இன்னும் சில கிராமங்களிலே குடி நீர் அளிக்கப்படாத நிலைமைஇருக்கிறது. மத்திய அரசு 20 அம்சத் திட்டத்தின் மூலமாக ஒதுக்குகிற பணம் இந்தத் திட்டத்திற்காகத் தருகிறது என்றால் அப்படிப்பட்ட இடங்களிலே குடிநீர் வசதி அளிக்கும் திட்டத்தை அதன் மூலமாக நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் நேரிடைத் தொடர்பு இல்லை. ஆனால் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படவில்லை, விடப்பட்டுப்போய்விட்டது என்ற நிலை இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் முறையீடு செய்வார்களேயானால் அதைப்பற்றி அரசு கவனிக்கும்.

பாலக்கோடு வட்டத்திற்கு தனி நிலவள வங்கி ஏற்படுத்தும் திட்டம்.

277— (*வினா எண் 17416)— திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்கோடு வட்டத்திற்கு ஒரு தனி நிலவள வங்கி ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாநில நிலவள வங்கி மற்றும் வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி இவற்றின் ஒப்புதல் கிடைத்த பிறகு ஆரம்பிக்கப்படும்.

திரு. மு. ப. முனுசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் சம்மதம் கிடைத்திருந்தும் கூட சென்ற ஆண்டிலிருந்து நிலுவையில் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் சொல்வதுபோல் நிலவள வங்கி வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான வங்கியிடமிருந்து ஒப்புதல் இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்தால்—ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு நிலவள வங்கி ஏற்படுதல் வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை—அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ப. முனுசாமி: தலைவர் அவர்களே, 2 மாதங்களுக்கு முன் அலுவலர்களைச் சந்திக்கும்போது கேட்டபோது அவர்கள் அரசுக்கு அனுப்பிவிட்டோம் என்று சொன்னார்கள், அதனால்தான் நான் கேள்வியை போட்டிருக்கிறேன். நிலுவையில் இருப்பதை மாற்றி உடனடியாக ஆரம்பிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான்.

**கைத்தறிகளின் அமைப்பை மாற்றி 'பெடலிங் சிஸ்டம்' உள்ள தறிகளை அறிமுகப் படுத்தும் திட்டம்.**

278.—(*வினா எண் 21477)— திரு. செ. செம்மலை: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித சக்தியால் இயக்கப்படும் தற்போதைய கைத்தறிகளின் அமைப்பை மாற்றி நெசவாளர்களின் வேலைப்பளுவைக் குறைக்கும் வகையில் 'பெடலிங் சிஸ்டம்' (Pedalling system) உள்ள தறிகளை அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) 1979—80 ஆம் ஆண்டு முதல் தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ''பெடல் தறிகள்'' வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இதுவரை 36 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 341 பெடல் தறிகள் நிறுவப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இந்த முறையை சில கூட்டுறவுச் சங்கங்களில் பரிட்சார்த்தமாக செயல்படுத்திப் பார்த்ததில் ஏதாவது பலன்கள் கிடைத்ததா? உற்பத்தி பெருக்கம் ஏற்பட்டதா? என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.